இரண்டாம் ஆண்டு (B)

# VBS ஆசிரியர் கையேடு

## நான்காம் குழு - முது நிலை

### IX, X, XI வகுப்புகள்

# மாற்றம் கொணர்ந்த விவிலியப் பெண்கள்

முதலாம் நாள்

## 1. நீதித்தலைவர்கள் தெபோரா, யாவேல்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

### இறைவார்த்தை

நீதித்தலைவர்கள் 4:4-24

### இறைச்செய்தி

✷-இறைவனின் துணைகொண்டு தெபோரா நம்பிக்கையுடன் தடைகளை எதிர்கொண்டார்.

✷-தெபோரா உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் இருந்தார்.

✷-யாவேல் தெபோராவின் மீட்புச் செயல்களுக்குத் துணை நின்றார்.

### மனநிலை

- ♦ இறைத்திட்டத்தில் முழுமையான நம்பிக்கை வைப்பேன்.
- ♦ அநீதியை அழிக்கப் பிறருக்குத் துணை நிற்பேன்.
- ♦ இறையாட்சியின் மதிப்பீடுகளை வளர்த்தெடுப்பேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

**பாடல் :** *எனை அனுப்பும் எனை அனுப்பும் -2 இதோ நான் இருக்கிறேன்*
*உலகம் அறியா எளியவன் வாய்மொழி பேசா சிறியவன்*

அனைத்தையும் படைத்து எம்மை அன்புடன் ஆளும் இறைவா! நீர் படைத்த மக்களின் துயர் தீர்க்கத் தாகம் குறையா உள்ளத்தோடும்



பொங்கும் அன்போடும் நிறைவாய் பணியைச் செய்த விவிலியப் பெண்களில் தெபோரா மற்றும் யாவேல் பற்றி படிக்க இருக்கும் எம்மீது உம் ஆசியை நிறைவாகப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

ஓர் ஊரில் சிறுவர்கள் யாரும் பள்ளிக்குச் செல்ல முடியாத சூழ்நிலை, காரணம், அனைவருமே மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அதனாலேயே தங்களது வாழ்வாதாரத்திற்காக பிள்ளைகள் அனைவரும் வேலைக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டது. வேலைக்குச் சென்ற பணத்திலிருந்துதான் தாங்கள் வாழவும் செய்தனர். இந்த நிலையில் அந்த ஊரில் இருக்கும் பெரிய பணக்காரர் ஒருவர் அந்தப் பிள்ளைகளை தன்னுடனே வைத்துக்கொண்டு நன்றாக வேலைகளை வாங்கிக் கொண்டிருந்தார். இதை அறிந்த ராணி மரியா என்கிற ஓர் அருட்சகோதரி அந்த இடத்திற்குச் சென்று அந்தப் பிள்ளைகளுக்கு உதவிகள் பல செய்து வந்தார். அதுமட்டுமல்லாது அந்தப் பிள்ளைகளுக்கு பாடங்களும் எடுத்தார். இதை அறிந்த அந்த பணக்காரன் கோபம்கொண்டு அந்த அருள்சகோதரியைக் கொலை செய்யத் திட்டங்களைத் தீட்டுகிறான். காரணம் தன்னிடம் வேலைக்கு வரும் பிள்ளைகளுக்கும் அப்பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும் உதவி செய்து அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தியதும் அவர்களது வாழ்வை மாற்றியதுமே காரணம். மேலும் அருள்சகோதரி மக்களை மதம் மாற்றுகிறார் என்று கூறி அவரைக் கொலை செய்தனர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ✹ பிறர் அநீதிக்கு உள்ளானபோது குரல் கொடுத்தது உண்டா?
- ✹ உன் மீது பழி சுமத்தியபோது பொறுமையாக இருந்தது உண்டா?
- ✹ அருள் சகோதரி ராணி மரியா பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

### 4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்

- கடவுளின்மேல் உறுதியான நம்பிக்கைகொண்டு தீமைக்கு எதிராகச் செயல்படுதல்.
- பிறருக்காகத் தொடர்ந்து போராடுதல்.
- பிறரைத் துன்பத்திலிருந்து விடுவிக்கப் பாடுபடுதல்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

இறைவார்த்தை இருபக்கமும் வெட்டக்கூடிய கூர்மையான வாள் போன்றது. இன்றைய இறைவார்த்தை நமக்கு வாழ்க்கையில்

சில நேரங்களில் எப்படிப் போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது. அப்பேர்பட்ட இறைவார்த்தைக்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஒருவர் திருவிவிலியத்தை பவனியில் கொண்டுவர ஒளி, தூபம், மலர்களைக் கொண்டு அஞ்சலி செலுத்த வேண்டும். பின்னர் இறைவார்த்தையை அரியணையில் வைத்து வணங்க வேண்டும்.

**பாடல்:** வார்த்தை ஆனவரே! வாழ்வும் ஆனவரே!

உம்மை ஆராதனை செய்கின்றோம் உம்மை ஆராதனை செய்கின்றோம் என்ற பாடலைப் பாடலாம்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

நீதித் தலைவர்கள் 4:4-24

(முன்னதாகவே வாசித்துப் பயிற்சி பெற்ற ஒருவர் இந்த இறைவார்த்தையை முழக்கமிடுவது நல்லது).

**8. இறைவார்த்தை விளக்கம்**

- அநீதி தலைவிரித்தாடுகின்றபோது, ஆண்டவர் உலகில் வந்து நீதியை, அறத்தை நிலைநாட்டுகிறார் என்ற நம்பிக்கை வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்கள் துன்புறுவார்கள். தம்மை இந்நிலைக்கு உள்ளாக்கியவர்களை தட்டிக்கேட்கத் துணியமாட்டார்கள். ஏனெனில் தட்டிக் கேட்டால் எல்லாமே போய்விடும் என்ற அச்சம்.
- அவர்கள் தங்கள் வழக்கைக் கடவுளிடம் வைப்பர். இறைவன் கண்டிப்பாக நீதி வழங்குவார். ஏழை மக்களை அவர் மீட்பார் என்பது நமது நம்பிக்கை.

**தெபோரா - வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்**

- தெபோரா என்பவர் ஒரு யூத குலப் பெண். இக்குலத்தில் பெண்களுக்குச் சிறப்பிடம் இல்லை. சபையில் எழுந்து பேச உரிமையில்லை என்ற காலம் உண்டு. எனினும் ஆண்டவர் தெபோராவைத் தனது கருவியாகக் கொள்கிறார். மனிதக் கண்களுக்கு வியப்பூட்டுகிறார்.
- "விடுதலைத் தலைவர்கள்" என்றே கேள்விப்பட்ட "இஸ்ரயேலருக்கு விடுதலைத் தலைவி" ஒருத்தியைத் தந்து இஸ்ரயேல் வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்துகிறார்.



**தெபோரா ஓர் இறைவாக்கினர்**

- விவிலியத்தில் (நீத 4) தெபோராவை இலப்பிதோத்தின் மனைவியாகக் காண்கிறோம். இவர் நீதித் தலைவியாக இருந்தார். இஸ்ரயேல் மக்கள் தீர்ப்புப் பெற வேண்டி இவரிடம் வருவர்.
- இவர் எப்ராயின் மலைநாட்டில் இராமாவுக்கும் பெத்தேலுக்கும் இடையில் ஒரு மரத்தடியில் அமர்ந்திருப்பார். அம்மரத்தின் பெயர் "தெபோராப் பேரிச்சை."
- நீதித் தலைவியாகச் செயல்படுவது எளிய செயலன்று. அதனினும் மேலாக எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு பெண்தலைமையேற்றுச் செயல்படுகிறார் என்றால் அவர் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ! இவர் நீதி செலுத்தி வந்த ஓர் இறைவாக்கினரும் ஆவார். இறை ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு செயல்பட்டதால் (6:34, 11:29, 14:6) இவர் ஓர் இறைவாக்கினர் என்று அழைக்கப்படுகிறார் (4:4).

**நீதித் தலைவர்கள் நாட்டின் காவலர்கள்**

- நீதித் தலைவர்கள் அந்நியப் படையெடுப்புகள், ஆதிக்கங்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தனர். போர்க் களத்தில் முன்னின்று போரிட்டு உற்சாகமூட்டி வெற்றியைப் பெற்றுத் தந்து மக்கள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழி செய்பவர்கள்.
- இவ்வாறு பல பணிகளை நீதித் தலைவர்கள் செய்து வந்தனர். இவர்கள் கடவுளால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் என்பதையும் நாம் மறத்தலாகாது.

**தெபோராவின் வெற்றிப்பண்**

- இறைவாக்குரைத்து, நீதி செலுத்திய தெபோரா இஸ்ரயேலின் காவலியாகின்றார். உண்மையில் ஆண்டவர் தெபோராவைத் தனது கருவியாகப் பயன்படுத்துகின்றார்.
- இறைவாக்கினரைப்போல், இஸ்ரயேலரின் தலைவர்களைப் போல் தன் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கண்டு தெபோரா மனம் வருந்துகிறார். இன்ப துன்பங்களில் பங்கெடுத்ததோடல்லாமல் போர்முனையிலும் பாராக்குடன் சென்று வீரத்திருமகளாகக் காட்சியளிக்கிறார்.

- தன் உயிரையும் பணயம் வைக்கத் தயங்கவில்லை. வெற்றி கிடைத்ததும் ஆண்டவரை நினைத்துப் பார்த்து நன்றிக் கீதமும் புகழ்ச்சிப் பண்ணும் பாடுகிறார். அவரோடு இணைந்து இஸ்ரயேலர் கடவுள் செய்த அருஞ்செயல்களைக் கண்டு அவரைப் போற்றுகின்றனர்.

**9. உய்த்துணரச் செய்தல்**

ஓர் இனம் அல்லது தனி மனிதர் துன்பத்துக்கு உள்ளாகும் போது கடவுள் ஒரு துணையாளரை அனுப்பி மீட்கிறார். கடவுள் என்னையும் அப்படிப்பட்ட பணியாளராகத் தேர்வு செய்வார். அப்போது எனது மனமுவந்த தியாகம் நிறைந்த ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.



இரண்டாம் நாள்

# 2. அன்னா
# இறைவேண்டலின் முன்மாதிரி

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

1 சாமுவேல் 1:9-20

## இறைச்செய்தி

- இறைவன்மீது இடைவிடாமல் நம்பிக்கை கொண்டிருந்தவர் அன்னா.
- அன்னா வாக்குறுதிகளுக்கு ஏற்ப வாழ்ந்தவர்.
- அன்னா இறைவேண்டல் வாழ்விற்கு முன்மாதிரியாக இருந்தவர்.

## மனநிலை

- கிடைக்கும் என்ற மனம்தளரா நம்பிக்கையுடன் எல்லாச் சூழ்நிலைகளிலும் இறைவேண்டல் செய்வேன்.
- பிறர் துன்பத்தில் இருக்கும்போது அதில் பங்குகொண்டு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.
- என்னைப் போன்ற சக மனிதரை மரியாதையுடன் நடத்துவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

**பாடல்** : *'தாயாக அன்பு செய்யும் என் உயிர் நீதானய்யா (அ) வேறு பொருத்தமான பாடல்*

கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று மொழிந்த எம் இறைவா! உமது அளவற்ற அன்பிற்காகவும் ஆசிகளுக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம். வாழ்விலே பல இன்னல்களை அனுபவித்தாலும் உம்மையே பற்றிக் கொண்டிருந்த இறை வேண்டலின் முன்மாதிரியான அன்னாவைப்போல நாங்களும் என்றும் உமது அன்பின் பிள்ளைகளாக வாழவும், உமது அரவணைப்பில் வளரவும், அன்னா கொண்டிருந்த இறைவேண்டல் விழுமியங்களான பொறுமை, சகிப்புத்தன்மை போன்றவற்றை எங்கள் வாழ்வில் ஏற்றுச் செயல்படவும் அருள்தாரும். எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாக - ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

சேலம் மறைமாவட்டம் மேட்டூர் அணைப் பங்கைச் சார்ந்தவர்கள் அமலா - ஞானப்பிரகாசம் தம்பதி. இவர்களுக்கு 12 ஆண்டுகள் ஆகியும் குழந்தைச் செல்வம் இன்றி ஏக்கத்தோடும் கவலையோடும் வாழ்ந்து வந்தனர். கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்த இவர்கள் குடும்பத்தில் அமலா பல இன்னல்களையும் கொடுமைகளையும் தனது மாமியார் மூலமாகவும் பல உறவுகளின் மூலமாகவும் சந்தித்தார். குடும்பப் பிரச்சினைகளில் இருந்து விடுபட தனிக் குடும்பமாகச் சென்றாலும் சமூகத்தின் தாக்குதல்கள் இவரை விடவில்லை. மலடி என்ற பட்டம் இவரை வெகுவாக வஞ்சித்தது. இதனாலேயே பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை முற்றிலுமாகத் தவிர்த்தார். கணவனும் மனைவியும் பலரிடம் மருத்துவ உதவி பெற்றனர், பல கோவில்களுக்குச் சென்று இறைவேண்டல் செய்தனர். பல நேரங்களில் அமலா கண்ணீர் மல்க அழுதுகொண்டே இருந்தார். இறுதியிலே ஒரு குழந்தையைத் தத்தெடுக்கவும் முடிவுசெய்து இருந்தார்கள்.

மேலும் பூமனூர் என்ற பங்கில் உள்ள பெரியநாயகி மாதாவிடம் உருக்கமாக வேண்டிக் கொண்டார்கள். நேர்ச்சையாக ஏழு வாரங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் நோன்பிருந்து மன்றாடினார்கள். சரியாக ஏழாவது வாரம் அமலா குழந்தை பாக்கியம் பெற்றதை மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்கிறார். பின்னர் அத்தம்பதி அழகான ஒரு பெண் குழந்தையைப் பெற்று, அக்குழந்தைக்கு மரிய ரூபினா என பெயரிட்டு அக்குழந்தையை மாதாவின் வருகையாய் நினைத்து, மகிழ்ச்சியுடனும் நிறைவுடனும் அன்னைக்கு நன்றி செலுத்தினர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- நம் குடும்பத்தில் குழந்தைச் செல்வம் இல்லாமல் இருக்கும் உறவினர்களை நாம் எப்படி பார்க்கிறோம்?
- குழந்தைச் செல்வம் இல்லாத தம்பதியருக்கு எப்படிப்பட்ட வழிகாட்டல்களை உன்னால் அளிக்க முடியும்?
- நீ அன்னை மரியாவிடம் மன்றாடிப் பெற்றுக்கொண்ட வரங்களைப் பகிர்ந்துகொள்.

**4. வாழ்க்கை மதிப்பீட்டைக் காணச் செய்தல்**

நாம் இறைவேண்டலில் இறைவனுடன் ஒன்றித்திருக்கும் போது ஆழ்ந்த நம்பிக்கை, பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை போன்ற பண்புகள் நம்முள் தானாகவே உடன் பயணிக்கின்றன. இத்தகைய பண்புகள் நம்மை தந்தையாம் இறைவனின் பிள்ளைகளாக வாழ அழைப்பு விடுக்கின்றன.



**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

இறைவன்மீது அதிகப் பற்றும் நம்பிக்கையும் கொண்ட அன்னா தான் செய்த இறைவேண்டலின் வழியாக மகப்பேற்றை இறை ஆசியாகப் பெற்றுக்கொண்டதை விளக்கிக் கூறும் திருவிவிலியப் பகுதிக்குச் செவிசாய்ப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

வகுப்புத் தலைவர் சற்றுத் தூரத்திலிருந்து திருவிவிலியத்தைப் பவனியாக உயர்த்திப் பிடித்துக்கொண்டு வருவார். அவருக்கு இருபுறமும் பிள்ளைகள் மலர்களைத் தூவி வார்த்தையாம் இறைவனை வரவேற்பார்கள். திருவிவிலியம் குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் முன்னதாகவே தயாரிக்கப்பட்ட 5 நபர்கள் திருவிவிலியத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் சிறப்பையும் எடுத்துரைக்கும் வசனங்களை ஒவ்வொருவராக உரக்கக் கூறுவார்கள். பின்னர் இறுதியாக திருவிவிலியத்தை அனைவரும் தலைதாழ்த்தி வணங்குவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

1 சாமுவேல் 1:9-28

(முன்னதாகவே வாசித்துப் பயிற்சி பெற்ற ஒருவர் இந்த இறைவார்த்தையை முழக்கமிடுவது நல்லது)

**8. இறைவார்த்தை விளக்கம்**

- எல்கானாவுக்கு இரு மனைவியர். ஒருவர் அன்னா, இன்னொருவர் பெனின்னா.
- ஆண்டவரால் மலடியாக்கப்பட்டதால் அன்னா பல துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார். மேலும் கண்ணீரோடு வாழ்ந்துவந்தார்.
- அன்னா வேதனையுடன் குழந்தைக்காக இறைவனிடம் மன்றாடினார்.
- தன்னுடைய விண்ணப்பத்திற்கேற்ப இறைவன் குழந்தை அளிப்பாரானால் அக்குழந்தையை ஆண்டவருக்கே ஒப்புக்கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.
- அன்னா ஆண்டவர் முன்பு மன்றாடுவதைக் கண்ட ஏலி அவரைக் குடிகாரி என்று நினைத்தார்.
- பின்னரே அன்னா மனம் நொந்து மன்றாடுவதைப் புரிந்துகொண்டார். அவருக்கு ஏலி ஆசியும் வழங்கினார்.

- அன்னா கருவுற்று ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தார். அவருக்குச் சாமுவேல் எனப் பெயரிட்டார்.
- தன்னுடைய வாக்குறுதிக்கேற்ப அன்னா தன் மகன் பால்குடி மறந்ததும் அவனை ஏலியுடன் ஆண்டவர் இல்லத்தில் பணி செய்ய அர்ப்பணித்தார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

"நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்றுவிட்டீர்கள் என நம்புங்கள்" (மாற்கு 11:24). எனவே எல்லாச் சூழ்நிலைகளிலும் மன்றாட்டு என்ற ஆயுதத்தைக் கையில் கொண்டு, இறைவன் துணை இருப்பார் என்று நம்பிக்கையோடு வாழ்வோம்.



மூன்றாம் நாள்

# 3. எஸ்தர் - புது வாழ்வுக்கு வித்திட்டவர்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

எஸ்தர் 7:1-10

## இறைச்செய்தி

- எஸ்தர் கடவுளின் ஆசியோடு யூத மக்களின் புது வாழ்வுக்கு வித்திட்டவர்.
- தன்னுடைய மக்களுக்காக எஸ்தர் தம் வாழ்வைத் தியாகம் செய்தவர்.
- அநீதிக்கு எதிராகக் குரல் கொடுத்து நீதியை நிலைநாட்டியவர்.
- அனைவரும் சமம் என்று எஸ்தர் தம் வாழ்க்கையின் மூலம் போதித்தவர்.

## மனநிலை

- பிறருடைய வாழ்க்கையில் துன்பம் நிகழும்பொழுது நான் அவர்களுக்குத் துணையிருப்பேன்.
- துன்ப நேரத்தில் எஸ்தரைப் போல் நான் கடவுளின் துணையை நாடுவேன்.
- எஸ்தரைப் போல் துணிச்சலோடு அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பேன்.
- கடவுளோடு ஒன்றித்து நன்மையை மட்டும் வாழ்வில் செய்வேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

**பாடல்** : *தேர்ந்து கொள்க.*

அன்பின் ஆண்டவரே! எஸ்தரைப்போல் நாங்களும் எங்களுடைய வாழ்வைப் பிறருக்காக வாழ, அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். மேலும் எஸ்தர் எவ்வாறு யூத மக்களின் புது வாழ்வுக்கு வித்திட்டாரோ அதேபோல் நாங்களும் பல்வேறு நபர்களுடைய வாழ்க்கை புது வாழ்வாக மாற உழைக்கும் நன்மனத்தை எமக்குத் தந்தருளும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

சுவாத் பள்ளத்தாக்கில் பிறந்து தன்னுடைய வாழ்வை பெண்களின் கல்விக்காகவும் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணித்தவர்தான் யூசுப் மலாலா. அவருடைய கல்விப் பருவத்தின்பொழுது, தாலிபான்கள் பெண்களுடைய கல்வியை அறவே ஒழித்து, பெண்கள் பள்ளிக்குச் செல்லக் கூடாது என்று தடுத்து நிறுத்தினார்கள். அப்பொழுது மலாலா தன்னுடைய வாழ்க்கையில் கல்வி முக்கியம் என்பதை உணர்ந்து தன்னுடைய புத்தகத்தை மறைத்து அவர்களுக்குத் தெரியாமல் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றார். தன்னுடைய 12ஆம் வயதில் உருது இணைய தளத்தில் 'சோழ பூ' என்ற புனைப் பெயரில் தாலிபான்களுக்கு எதிராக எழுதத் தொடங்கினார். அதில் மலாலா, "ஒருசில மக்கள் பாம்பைக் கண்டு பயப்படுகின்றார்கள். ஒருசில மக்கள் சிலந்தியைக் கண்டு பயப்படுகின்றார்கள். ஆனால் நாங்களோ மனித மிருகங்களைக் கண்டு பயப்படுகின்றோம்" என்று தாலிபான்களைக் குறித்து எழுதியுள்ளார்.

2009இல் இவர் எழுதிய கட்டுரைக்கு அவருடைய தந்தையின் ஆதரவு அதிகமாக இருந்தது. பின்னர் தன்னுடைய சொந்தப் பெயரான மலாலா என்ற பெயரில் எழுத ஆரம்பித்தார். அக்டோபர் 9, 2012 அன்று பள்ளி முடித்து வீட்டிற்கு செல்லும் வழியில் தாலிபான்களால் துப்பாக்கியால் மலாலா தாக்கப்பட்டார். சிறிய வயதிலிருந்து பெண்களுக்காகவும் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்ததால், மலாலாவை பாகிஸ்தான் அரசு இங்கிலாந்து நாட்டிற்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தது. இன்னும் கூட தன்னுடைய வாழ்க்கையைப் பெண்களுடைய முன்னேற்றத்திற்காகவும் அவர்களுடைய கல்விக்காகவும் செலவழித்துக் கொண்டிருக்கின்றார் மலாலா. 2014 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்று பெண்களின் முன்னேற்றத்திற்காக இன்னும் குரல் கொடுத்து வருகிறார்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- மலாலா தாலிபான்களைக் குறித்து எழுதிய வரிகள் சரியானவையா?
- மலாலாவின் கல்விப் பயணம் எவ்வாறு இருந்தது?
- தீமைகளை எதிர்த்து நீ எப்போதாவது குரல் கொடுத்துள்ளாயா?
- மலாலாவின் வாழ்க்கையைப் பற்றி உன் கருத்து என்ன?



**4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்**

- சிறு வயதிலேயே தாலிபான்களுக்கு எதிராகத் துணிவுடன் கட்டுரை எழுதத் தொடங்கினார்.
- அநீதிக்குக் குரல் கொடுத்து தனி மனித உரிமையை நிலைநாட்டினார்.
- கல்விக்கு முக்கியம் கொடுத்து பெண்களின் உரிமையைக் காத்தார்.
- தன்னுடைய வாழ்க்கையைப் பாராமல் பெண்களுடைய புது வாழ்விற்கு வித்திட்டார்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

நம்முடைய வாழ்க்கையில் மட்டுமல்லாமல் பிறருடைய வாழ்க்கையிலும் நடக்கும் அநீதிகளைத் தட்டிக்கேட்டு நீதியைப் பெற்றுத்தர பாடுபட வேண்டும். யூத மக்களுக்கு ஆமான் மூலம் நடந்த அநீதியை தட்டிக்கேட்டு இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கிய எஸ்தரின் வாழ்க்கையைத் திருவிவிலியத்திலிருந்து வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

நடுவில் அரியணையேற்றப்பட்ட திருவிவிலியத்தின் அருகில் சென்று, ஆசிரியர் அதனை வணங்கி, "பிறருக்காக வாழ வேண்டும்" என்பார். மாணவர்கள் அனைவரும், "புது வாழ்வுக்கு வித்திட்ட எஸ்தரைப்போல நானும் பிறருக்காக வாழுவேன்" என இருமுறை கூறி வணங்குவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

எஸ்தர் 7:1-10

(முன்னதாகவே வாசித்துப் பயிற்சி பெற்ற ஒருவர் இந்த இறைவார்த்தையை முழக்கமிடுவது நல்லது)

**8. இறைவார்த்தை விளக்கம்**

- அரசன் அகஸ்வேர், மொர்தக்காய் மற்றும் ஆமான் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களை வகிக்கின்றார்கள்.
- ஆமான் என்பவன் அரசனுடைய அதிகாரிகளை கண்காணிப்பவன், மொர்தக்காய் ஒரு யூதர், ஆமானுக்கு கீழ் பணிபுரிபவர்.
- ஒரு நாள் ஆமானின் பணியாளர்கள் அனைவரும் ஆமானை வணங்கியபொழுது மொர்தக்காய் மட்டும் வணங்காமல்

இருந்தார். காரணம் அவர் ஒரு யூதர். எனவே ஆமான் கடுஞ்சினமுற்று மொர்தக்காயையும், யூத மக்களையும் கொல்லத் திட்டமிட்டான்.

- ❖ அத்திட்டத்தை அரசி எஸ்தரிடம் கூறினார் மொர்தக்காய்.
- ❖ அநீதி நடக்கின்றது என்பதைக் கேள்வியுற்ற எஸ்தர் தன்னுடைய செயல் மூலம் அவர்களுக்கு விடுதலை அளித்தார்.
- ❖ அரசனுடைய உயிரைக் காப்பாற்றிய மொர்தக்காய்க்கு எந்தச் சிறப்பும் செய்யவில்லை என்பதால் ஆமான் மூலமாகவே மொர்தக்காய்க்கு சிறப்பை பெற்றுத் தந்தார்.
- ❖ யூத மக்களையும், மொர்தக்காயையும் கொலை செய்யும் ஆமானின் திட்டத்தை எஸ்தர் தன்னுடைய விருந்தில் அரசர் அகஸ்வேருக்குத் தெரிவித்தார்.
- ❖ ஆமான் வஞ்சகன், தீயவன் என்று எஸ்தர் அரசி கூறியதை அரசர் ஏற்று, மொர்தக்காயைக் கொலை செய்ய ஆமான் ஏற்படுத்திய தூக்குமரத்திலேயே ஆமானை தூக்கில் போட்டார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

அநீதிக்கு எதிராகப் போராடுவதில் எஸ்தர் அரசியிடம் விளங்கிய துணிவும் கடவுள் நம்பிக்கையும் நமக்கு வேண்டும். நீதிக்குக் குரல் கொடுக்கும் மக்களாகவும் கடவுளுடைய வார்த்தையைப் பின்பற்றும் மக்களாகவும் நாம் வாழ வேண்டும்.



நான்காம் நாள்

# 4. யூதித்து - விடுதலை அளித்த புதுமைப்பெண்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

யூதித்து 13:14-20

## இறைச்செய்தி

- ✸ யூதித்து கடவுளின் துணைகொண்டு எதிரி ஒலோபெரினை அழித்தார்.
- ✸ அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரயேல் மக்களை, யூதித்து இறை வல்லமையோடு விடுவித்தார்.
- ✸ ஒடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்காகத் தம் உயிரையே பணயம் வைத்தார் விடுதலைப் பெண், யூதித்து.

## மனநிலை

- ✸ நான் ஒருபோதும் பிறரை அடிமைப்படுத்தித் துன்புறுத்த மாட்டேன்.
- ✸ பெண்களும் சமூக நலனில் மிகுந்த அக்கரையுள்ளவர்களே என்பதை நினைவில் கொள்வேன்.
- ✸ கடவுளிடம் மிகுந்த பற்றுக்கொண்டு எப்பொழுதும் அவரது துணையையே நாடுவேன்.
- ✸ கடவுளிடம் பிறருடைய துன்பங்கள் நீங்குவதற்காக மன்றாடுவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

**பாடல்** : *விடுதலை நாயகன் வெற்றியைத் தருகிறார்*

நீதியின் தலைவரே எம் இறைவா! அநீதிக்கு எதிராகப் போராடும் சிறந்த எடுத்துக்காட்டாய் யூதித்தை எங்களுக்கு அளித்துள்ளீர். பிறரை அடிமைப்படுத்தி துன்புறுத்தும் இவ்வுலகில் நாங்கள் யூதித்தைப் பற்றி அறிந்துகொண்டு, அவருடைய நற்பண்புகளை வாழ்வாக்கி, இச்சமூக மாற்றத்திற்காகச் செயல்பட உமது தூய ஆவியின் ஆற்றலை எமக்கு அளித்தருளும். விடுதலையின் நாயகன் எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

திருச்சியில் ஒரு சாதாரண பெண்ணாக வளர்ந்தவர் சீதா. நாடோடிப் பழங்குடியின மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து புறக்கணிப்புகளையும் கண்டு மனம் வெதும்பினார். 1990-ல் நாடோடி பழங்குடியினர் நலனுக்கான சங்கம் மற்றும் குழந்தைகளுக்கான விடுதியையும் ஆரம்பித்தார். இதற்காகத் தானம் கேட்டு ஊர் ஊராக அலைந்தவர், ஒருகட்டத்தில் பாசி, மணி தயாரித்து வெளிநாடு-களுக்கு ஏற்றுமதி செய்து அசத்தினார். இந்தத் தொழிலைக் கைவினைத் தொழில்கள் பட்டியலில் சேர்க்க வழிவகை செய்து, நாடோடி பழங்குடியின சமூகத்தினர் பல ஆயிரம் பேரை தொழில்முனைவோராக மாற்றினார். தன் இனத்துக்குத் தனி நல வாரியம் பெற்றுக் கொடுத்ததுடன், அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க ஆட்சியாளர்களைச் சந்திப்பது, நீதிமன்றத்தை நாடுவது, சிறைவாசம் என 30 ஆண்டுகளாக சமரசமின்றிப் போராடி, இருளில் இருந்த பழங்குடியின சமூகத்தினருக்கு விடுதலை அளித்தவராய் தன் களப்பணியை இன்றும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் சீதா. "சேவை தேவதை" என்ற விருதிற்குச் சொந்தக்காரரும் இவரே.

**3. அடையாளத்தை அலசுதல்**

- நாடோடிப் பழங்குடியின மக்களின் புறக்கணிப்புகளுக்கு மாற்றாக சீதாவின் மனநிலை என்ன?
- நாடோடி பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக சீதா எவையெல்லாம் செய்தார்?
- நீங்கள் பெண்ணினத்திற்காக ஏதேனும் சமூக சேவை செய்ததுண்டா?

**4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்**

- பிறப்பின் அடிப்படையில் அனைவரும் சமமானவர்களே, தொழில், கல்வி கொண்டு எவரையும் புறக்கணித்தல் கூடாது.
- சகோதரத்துவம் மற்றும் சமத்துவத்திற்காகக் குரல் எழுப்பி, தொடர்ந்து போராட வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களினங்களை முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்ல வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

பல தியாகங்களை மேற்கொண்டாகிலும் பிறரை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதை யூதித்தின் வாழ்க்கை நமக்கு அறிவுறுத்துகிறது. யூதித்து அப்படி என்ன



தியாகம் செய்தார், எப்படிச் செய்தார் என்பதை திரு விவிலியத்திலிருந்து வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

நடுவில் அரியணையேற்றப்பட்ட திருவிவிலியத்தின் அருகில் சென்று, ஆசிரியர் அதனை வணங்கி, "இறை வார்த்தையை ஏற்று; உன் இதயத்தை மாற்று" என்பார். மாணவர்கள் அனைவரும், "விடுதலைதரும் வார்த்தையினை ஏற்று நாளும் அவ்வழி நடப்போம்" என இருமுறை கூறி வணங்குவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

யூதித்து 13:14-20

(முன்னதாகவே தேர்வு செய்யப்பட்ட மாணவர் திரு விவிலியத்தை வணங்கி அதனை எடுத்து உற்சாகமாக முழக்கமிடுவார்).

**8. இறைவார்த்தை விளக்கம்**

- அரசர் நெபுகத்னேசருடைய படைத்தலைவன் ஒலோபெரினின் அடிமைத்தனத்தில் இஸ்ரயேல் மக்கள் இருந்தனர்.
- பெத்தூலியாவைச் சேர்ந்த மெராரியின் மகள் யூதித்து ஒரு கைம்பெண். மிகுந்த இறைப்பற்றும், அழகும், அறிவுக் கூர்மையும் உடையவர்.
- யூதித்து கடவுளின் துணை கொண்டு, அசீரியப் படையின் முகாமுக்குச் சென்று ஒலோபெரினின் தலையை வெட்டி, அவனை அழித்து இஸ்ரயேல் மக்களை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்தார்.
- "கடவுளைப் போற்றுங்கள், நம் பகைவரை என் கையால் அழித்துவிட்டார்" என்று யூதித்து தம் மக்களிடம் கூறினார்.
- "மகளே, உலகில் உள்ள எல்லாப் பெண்களையும் விட நீ உன்னத கடவுளின் ஆசி பெற்றவர். அவரே உன்னை வழிநடத்தினார்" என்று மூப்பர்களுள் ஒருவரான ஊசியா வாழ்த்தினார்.
- யூதித்து கடவுள் திருமுன் நேர்மையாக நடந்து, ஒடுக்கப்பட்ட, தன் இனத்தவர்களான இஸ்ரயேல் மக்களுக்காகத் தம் உயிரையே பணயம் வைத்து அவர்களை விடுவித்தார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

ஆண், பெண் யாராக இருப்பினும் கடவுளை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு பிறருடைய நலனுக்காகப் போராடுவோர் அனைவருக்கும் கடவுள் திண்ணமாய் வெற்றி அளிப்பார்.

ஐந்தாம் நாள்

# 5. சூசன்னா - ஒழுக்கத்தின் துலாக்கோல்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

தானியேல் (இ) 2: 42-64

## இறைச்செய்தி

- இறை அச்சம் கொண்டு பாவத்தை விலக்குவோரை கடவுள் கைவிடார்.
- கடவுளோடு இணைந்து இருப்போர் அநீதிக்கு உடன்படார்.
- கடவுள் நீதியுள்ளவர். அதற்காக உழைப்போருக்குத் துணை நிற்பார்.

## மனநிலை

- என்மீது அநீதியாகக் குற்றம் சுமத்தப்படும்போது சூசன்னா போன்று நான் கடவுள்மீது நம்பிக்கைக் கொள்வேன்.
- எந்த சூழ்நிலையிலும் பாவம் செய்யமாட்டேன்.
- தீமை செய்வோர் தண்டனை பெறுவர் என்பதை உணர்வேன்.
- அநீதிக்குத் துணை போகாமல் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக இருப்பேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

**பாடல்** : *தேர்ந்து கொள்க.*

அன்பு ஆண்டவரே! உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம். உமது அன்பு உறவில் என்றும் அசையாத நம்பிக்கைக்கொண்டு தீமைக்கு இடம்கொடாமல் வாழ்ந்திட உம்மிடம் மன்றாடு கின்றோம். தவறு செய்யாமல் தண்டனைக்கு உட்படுத்தப்பட இருந்த சூசன்னாவை இறைவாக்கினர் தானியேல் வழியாகக் காப்பாற்றியதை படிக்க இருக்கும் எங்களுக்கு உமது ஆசிகளை நிறைவாக அளித்தருளும் - ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

வசந்தா இளமையும் அழகும் நிறைந்தவர். அவர் இராணுவ வீரர் வனத்தையனைத் திருமணம் செய்திருந்தார். போர் ஒன்றில் வனத்தையன் இறந்துவிட்டார். நாட்டுப்பற்றும் கணவன் பற்றும் நிறைந்த வசந்தா மீண்டும் திருமணம் செய்துகொள்ளவில்லை.



ஊரில் ஒரு குளிர்பானக் கடை நடத்திவந்தார். அதே ஊரைச் சேர்ந்த வசந்தகுமார் வசந்தாவை விரும்பினான். பலதடவை தம் ஆசையை வெளிப்படுத்தினான். வசந்தா இணங்கவில்லை. இதனால் வசந்தகுமார் வசந்தாவைப் பழிதீர்க்கக் காத்திருந்தான்.

ஒருநாள் கடையில் கூட்டமில்லை. ஒரு பெரிய பணக்காரர் தனது காரை நிறுத்திவிட்டு வந்து ஓர் ஆப்பிள் ஜூஸ் கேட்டார். கேட்டவர் அவசரத் தேவைக்குப் பின்புறம் போய்விட்டார். வசந்தா உள்பக்கம் வைத்திருந்த ஒரு வாசனைப் பொருளை எடுக்கப் போயிருந்தார். அப்போது திடீரென்று அங்கு வந்த வசந்தகுமார் வசந்தா கழுவி வைத்துவிட்டுச் சென்ற கண்ணாடி டம்ளரில் ஏதோ ஒன்றைப் பீச்சியடித்துவிட்டுப் போய்விட்டான். அவசரமாக வந்த வசந்தா அதே டம்ளரில் விலை உயர்ந்த வாசனையுள்ள ஆப்பிள் ஜூஸை கலந்து கொடுத்தாள். அதைக் குடித்த சில நிமிடங்களில் அந்தப் பணக்காரர் கைகால்களை உதறி, வாயினின்று நுரைவடிந்து இறந்துபோனார். அந்தப் பணக்காரருக்குத் தொழில் போட்டி நிறைய உண்டு. எதிரிகள் ஏராளமானோர் இருந்தனர். அவர்களின் தூண்டுதலில்தான் வசந்தா இப்படி நடந்து கொண்டதாக வழக்கு. ஊரே வசந்தாவுக்கு எதிராக இருந்தது. நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்க இருந்த சமயத்தில் ஓர் இளைஞன் ஓடி வந்து ஒரு சிசிடிவி கேமரா ஒளிப்பதிவைக் காட்டினான். அதை அந்தக் கடையில் பொருத்திய மின் பணியாளரே அவன்தான். அதன் உரிமையாளர் வெளிநாட்டில் இருந்ததால் அக்கருவி இருந்தது யாருக்கும் தெரியாது. அதில் வசந்தகுமார் செய்த விசமம் தெரியவந்தது. வழக்கு மன்றத்தில் அவனுக்கு அபராதமும் தண்டனையும் வழங்கப்பட்டது. வசந்தா விடுதலையானார். அந்த இளைஞனை எல்லாரும் பாராட்டினர்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- சிக்கலில் மாட்டிக்கொண்ட யாருக்காவது நீங்கள் உதவியிருக்கிறீர்களா?
- நீங்கள் சிக்கலில் மாட்டிக்கொண்டபோது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?
- இந்த இளைஞன் செய்ததைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

### 4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்

- துன்பத்தில் உதவுவது தூய பண்பு
- துணிவு இருந்தால்தான் நற்செயல்களைச் செய்ய முடியும்.
- கடவுள்மீதும் தன்மீதும் நம்பிக்கை வைத்தல் சிறந்த அணுகுமுறை.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

யூத ஒழுக்கத்தின்படி அப்பழுக்கற்றவராய் வாழ்ந்து வந்த சூசன்னாவின் பேரழகில் மயங்கிய முதியோர் இருவர் அவரை அடைய முயன்றனர். அது நிறைவேறாததால் அவர்மீது பொய்க் குற்றம் சுமத்தி, அவருக்குச் சாவுத் தண்டனை விதித்தனர். ஆண்டவரோ தானியேல் வழியாக அவருக்கு முறையான தீர்ப்பு வழங்கி, அவரைச் சாவின் பிடியிலிருந்து விடுவித்தார். இந்நிகழ்வை திருவிவிலியத்திலிருந்து வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் திருவிவிலியத்தை நடுவில் அரியணையேற்றி வைப்பார். மாணவர்கள் ஆளுக்கொரு மலர் வைத்திருப்பர். ஆசிரியர் 'ஆபத்தில் உதவும் ஆண்டவருடைய வார்த்தையே ஆற்றலுடன் வாரும்' என்பார். எல்லாரும் 'ஆற்றலுடன் வாரும்' என்று கூறிவிட்டு மலர்களை திருவிவிலியத்தின்மீது போடுவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

தானி (இ) 2: 42 - 64

(முன்னதாகவே தேர்வு செய்யப்பட்ட மாணவர் திரு விவிலித்தை வணங்கி, அதனை எடுத்து உற்சாகமாக முழக்கமிடுவார்).

**8. இறைவார்த்தை விளக்கம்**

'பாவம் செய்வதைவிட சாவதே மேல்' என்பது கி.பி. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித தோமினிக் சாவியோவின் வார்த்தைகள். இயேசு பிறப்பதற்கு குறைந்தது 500 ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட இணைப்பு திருமுறை புத்தகங்களில் ஒன்றான தானியேல் நூலில் சூசன்னாவின் நிகழ்வைக் காணலாம். பாவம் என்று சொல்லும்பொழுது, தீமையைச் செய்வதும் பாவம்தான், நன்மை செய்யத் தவறுவதும் பாவம்தான். சூசன்னா 6வது கட்டளைக்கு எதிராக பாவம் செய்ய மாட்டேன் என்று அறுதியிட்டுக்கூறுகிறார். தானியேல் நீதியை நிலைநாட்டும் வேட்கையில் தவறான நீதிபதிகளின் வழக்குக்கு எதிர் குரலாக அமைகின்றார். "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்" (மத் 5:6).

சூசன்னா என்று ஒரு பேரழகி இருந்தார். அவர் யோவாக்கிம் என்ற செல்வந்தரின் மனைவி. இருவருமே இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்த நல்லவர்கள். யோவாக்கிமைத் தேடிவந்த மக்கள் கொண்டுவந்த வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச்



சொல்ல இரு முதியவர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் இருவரும் காம வெறியர்கள் என்பதைப் பலர் அறிந்திருக்கவில்லை.

**மறைந்திருந்த பாதகர்கள்**

சூசன்னாவின் அழகில் மயங்கி, அவரைத் தங்களுக்கு இணங்கவைக்க சரியான சந்தர்ப்பத்திற்காக அவர்கள் காத்திருந்தனர். வெப்பம் அதிகமாக இருக்கும் நாள்களில் அவர் வீட்டுத் தோட்டத்தில் நீராட வருவார் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே முன்பே தோட்டத்துக்கு வந்த சூசன்னாவும் அவரது இரு பணிப்பெண்களும் இவர்களைப் பார்க்கவில்லை. இப்படி இருவர் தோட்டத்தில் ஒளிந்திருக்கக்கூடும் என்று அவர்களுக்குத் தோன்றவே இல்லை.

அவர் நீராட எண்ணெயும் நறுமணப் பொருள்களும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, அவர் சொன்னவாறே தோட்டத்துக் கதவைப் பூட்டிவிட்டு, பணிப்பெண்கள் போனபிறகு அந்தக் கயவர்கள் இருவரும் ஓடிவந்து, "எங்கள் இச்சைக்கு நீ இணங்காவிட்டால், பணிப்பெண்களை அனுப்பிவிட்டு, தோட்டக் கதவைப் பூட்டிவிட்டு ஓர் இளைஞனோடு நீ இங்கே உறவுகொண்டாய் என்று குற்றம் சுமத்துவோம்" என்றனர்.

சூசன்னா சத்தம் போட்டுக் கத்த, அந்த இரு கயவர்களும் கத்திக் கூச்சல் போட்டனர். வீட்டில் இருந்து ஓடி வந்தவர்களிடமும், மறுநாள் அவளின் கணவரோடு கூடியிருந்த மக்களிடமும் வயதான அந்த இருவரும் தாங்கள் கற்பனை செய்திருந்தக் கட்டுக் கதையைக் கூறினர். அதனை மறுத்த சூசன்னா எல்லாம் அறிந்த இறைவனிடம் தன்னைக் காக்குமாறு உரத்த குரலில் வேண்டினார். ஆனால் அவர் ஒருவர், அவரைக் குற்றம் சாட்டியவர்களோ இரண்டுபேர். அதுவும் மக்களின் வாக்குகளைக் கேட்டு தீர்ப்பு வழங்கும் நடுவர்களாக இருந்தவர்கள். எனவே அவர்கள் இருவரும் சேர்ந்து சொன்ன கதையை உண்மையென்று நம்பி, அவர் சாக வேண்டும் என மக்கள் கூட்டம் தீர்ப்பளித்தது.

**இறைவனிடம் மன்றாடிய சூசன்னா**

கொலைக்களத்துக்குப் போகும் வழியிலும் சூசன்னா கதறி அழுது, தன்னைக் காக்குமாறு இறைவனிடம் மன்றாடினார். இறையருள் பெற்ற தானியேல் என்ற இறைவாக்கினர், மக்கள் கூட்டத்தை நிறுத்தி, தீர்ப்புச் சொன்ன இடத்திற்கே திரும்பப் போகுமாறு சொன்னார். வழக்கை ஆராயாமல், உண்மையை அறிந்துகொள்வதற்கு முயற்சிக்காமல் அவசரப்பட்டு, குற்றமற்ற ஒரு பெண்ணைக் கொல்லவிருந்த அந்த கூட்டம் எதுவும் புரியாமல்

திரும்பிச் சென்றது, பொய் சொன்னவர்கள் இருவரையும் பிரித்து வெவ்வேறு இடங்களில் வைத்திருக்குமாறு சொன்னார் தானியேல். பின்பு அவர்களில் ஒருவனை மட்டும் அழைத்து, "எந்த மரத்தடியின் கீழ் சூசன்னாவும் அந்த இளைஞனும் கூடியிருக்கக் கண்டாய்?" என்று கேட்டார். அவன் "விளா மரத்தடியில்" என்றான். அவனை அவன் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றபிறகு, மற்றவனை வரவழைத்து அதே கேள்வியைக் கேட்டார். அவன் "கருவாலி மரத்தின் அடியில்" என்றான். தங்களுடைய கொடூரமான குற்றத்தை மறைப்பதற்காக அவர்கள் சொன்ன பொய்யைப் புரிந்துகொண்ட மக்கள் அவர்களைத் தண்டித்தனர். சூசன்னாவைக் காத்த கடவுளைப் போற்றினார்கள்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- தம்மில் நம்பிக்கை கொள்வோரை எல்லாவகைத் துன்பத்திலிருந்தும் கடவுள் காப்பாற்றுகிறார்.
- எந்தச் சூழ்நிலையிலும் பாவத்தைத் தவிர்த்து நீதிக்குக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.



ஆறாம் நாள்

# 6. ஏழு மகன்களின் தாய் நம்பிக்கையின் நங்கூரம்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

2 மக்கபேயர் 7:30-41

## இறைச்செய்தி

- ஏழு சகோதரர்களின் தாய் கடவுள்மீது அழியா நம்பிக்கை வைத்திருந்தார்.
- மூதாதையரின் மரபுக்காக ஏழு சகோதரர்களும் மறைச் சாட்சிகளாய் இறந்தார்கள்.
- நம்பிக்கை கொள்வோர் நிலைவாழ்வு பெறுவர்.

## மனநிலை

- என் எல்லாத் துன்ப வேளையிலும் ஆண்டவரிடம் நம்பிக்கையுடன் இறைவேண்டல் செய்வேன்.
- எனது தொடர் நம்பிக்கையால் வாழ்க்கையில் வெற்றி பெறுவேன்.
- இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டு வாழ நான் பிறரையும் தூண்டுவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

**பாடல்** : *நீ எந்தன் பாறை என் அரனான .....*

எல்லா நலன்களுக்கும் ஊற்றான இறைவா! துயருறுவோருக்கு ஆறுதலும், வருந்துவோருக்குத் திடனும் நீரே. பல்வேறு எதிர்பார்ப்புக்களோடு நம்பிக்கையுடன் மன்றாடுகின்ற அனைவருக்கும் நீர் செவிசாய்த்து வருகின்றீர். இன்று நாங்கள் படிக்க இருக்கும் ஏழு சகோதரர்களின் சாட்சிய வாழ்வை எங்கள் மனத்தில் பதித்து, நாங்களும் உம்மேல் பற்றுறுதியுடன் வாழ அருள்தாரும் - ஆமென்

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

பெங்களூருவில் வாழ்ந்து வந்த பெண் கௌரி லங்கேஷ். அவர் ஒரு வாரப் பத்திரிகையை நடத்தி வந்தார். அச்சமற்ற, வெளிப்படையான பத்திரிகையாளர் என்று அனைவராலும் அறியப்பட்டார். அடிமைப்படுத்தும் அரசியல் கட்சிகளைப் பற்றி

தனது பத்திரிகைகளில் உண்மையை உரக்க எடுத்துச் சொன்னவர். 2000ஆவது ஆண்டில் கௌரியிடம் எடுக்கப்பட்ட நேர்காணலில், அவருக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் மற்றும் கொலை மிரட்டல்கள் குறித்துக் கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறியதாவது, “என் மீது தாக்குதல் நடத்தப்படுவது குறித்து என்றுமே நான் பயம் கொண்டதில்லை. பல முறை மிரட்டல் அழைப்புகள் வந்துள்ளன. ஆனால், என்னை மிரட்டுபவர்களிடம், உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமெனத் தோன்றுகிறதோ அதைச் செய்து கொள்ளுங்கள்” என்று கூறிவிடுவேன். ஏனெனில் எனது நம்பிக்கை உண்மையின் கடவுள்மீது உள்ளது. அந்த நம்பிக்கை என்னைக் காக்கும். உண்மையை உள்ளபடி பத்திரிகையில் எடுத்துரைப்பதே என் பணி. நான் எவருக்கும் அடிபணிந்து அஞ்சத் தேவையில்லை” என்றார். இவரது துணிச்சலையும் நம்பிக்கையையும் கண்டு தீய சக்திகள் இவர்மேல் கோபமும் வெறுப்பும் கொண்டனர். திட்டமிட்டு கௌரியைச் சுட்டுக் கொலை செய்தனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ✭ துன்பவேளையில் நீங்கள் உங்களது நம்பிக்கையை யார்மீது வைத்துள்ளீர்கள்?
- ✭ நீங்கள் நன்மை செய்தும் மிரட்டப்பட்டபோது உங்களது மனநிலை எப்படி இருந்தது?
- ✭ மிரட்டலுக்குப் பயந்து நீங்கள் நற்செயல்செய்வதைக் கைவிட்டுள்ளீர்களா?

**4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்**

- நம்பிக்கை இறைவனை நம் அருகில் கொண்டுவரும்.
- நம்பிக்கை இல்லாத வாழ்வு செத்த வாழ்வு.
- என்ன நேர்ந்தாலும் இறைநம்பிக்கையை இழக்கக் கூடாது.
- நம்பிக்கையே கிறிஸ்தவ வாழ்வின் ஆணிவேர்

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

எத்தனை துன்பம் வந்தாலும், ஏன் தன் உயிரே போனாலும் நம் இறைவன் ஒருவரே உண்மையுள்ளவர் என்று அறிக்கையிட்டு, அவரில் நம்பிக்கை வைத்து தம் ஏழு மகன்களுக்கும் அறிவுரை கூறும் தாயின் செயல்பாட்டை விளக்கும் திருவிவிலியப் பகுதிக்குச் செவி சாய்ப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

**பாடல்:** *வாழ்வு தருவது இறைவார்த்தை*



நம்பிக்கை தருவது இறைவார்த்தை

அன்பு தருவது இறைவார்த்தை

எழுதுகோல், நோட்டு, மலர் ஆகியவற்றை மாணவ மாணவிகள் கொண்டு வந்து அழகுபடுத்தப்பட்டு அரியணை யேற்றப்பட்டிருக்கும் திருவிவிலியத்திற்கு முன்வைத்துத் தலை வணங்கி மரியாதை செலுத்துவார்கள்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

2 மக்கபேயர் 7:30-41

(இறைவார்த்தையை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்த ஒருவர் இப்போது முழக்கமிடுவது நல்லது).

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ❧ ஒரு தாய் மற்றும் அவரது ஏழு மகன்கள் தங்கள் மதக் கொள்கைக்கு எதிராகப் பன்றி இறைச்சி உண்ண மறுத்தற்காக மரணத்தை எதிர்கொள்கின்றனர்.
- ❧ நம்பிக்கையின் வலிமை அவர்களின் அசையாத அர்ப்பணிப்பையும் அதனால் பெற்ற அதிகப்படியான துன்பங்களையும் எடுத்துச் சொல்கிறது.
- ❧ தனிப்பட்ட பாதுகாப்பிற்கு மேலாக ஆன்மிக நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- ❧ துன்புறுத்தலின்போது தனது மதிப்பீடுகளை நிலை நிறுத்துவதன் முக்கியத்துவத்தையும் இப்பகுதி வலியுறுத்துகிறது.
- ❧ ஒவ்வொரு மகனும், அதே போல் தாயும் வெளிப்படுத்தும் தைரியம், அவர்களின் நம்பிக்கையில் ஆழ்ந்த அர்ப்பணிப்பையும், துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தையும் பிரதிபலிக்கிறது.
- ❧ இது வசதிக்காகக் கொள்கையைத் தேர்ந்தெடுக்கும் தனிநபர்களின் நீடித்த தாக்கத்தைச் சிந்திக்கத் தூண்டுகிறது.
- ❧ அவர்களின் வாழ்க்கை முறையை எதிர்கொள்பவர்களுக்கு நம்பிக்கையை விட்டுச்செல்கிறது
- ❧ இதைத் துணிச்சலின் நிகழ்வாக அணுகலாம் மற்றும் கடினமான தேர்வுகளை எதிர்கொள்ளும்போது சரியானதை நிலைப்பாட்டை எடுக்கும். துணிவுமிக்க செயல்பாடாகவும் கருதலாம்.

- ஒருவரின் நம்பிக்கைக்கு உண்மையாக இருப்பதன் மூலம் வரும் வலிமை இதில் நிரூபிக்கப்படுகிறது.
- தாய் மற்றும் அவரது மகன்களின் துணிவு மற்றும் நம்பிக்கை நமக்கு முன்மாதிரியாக இருக்கின்றன. குழந்தைகள் தங்கள் சொந்த நம்பிக்கைகளில் வலுவாக இருக்கவும், உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சவால்களை எதிர் கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
- இது குடும்பப் பிணைப்புகள் மற்றும் சரியானதைச் செய்வதில் நீடித்த தாக்கம் பற்றிய விவாதங்களை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்வு.

**9. உய்த்துணரச் செய்தல்**

நம் வாழ்வில் நாம் பலவிதமான சவால்களைச் சந்திக்கின்றோம். அந்தச் சவால்களை நம்பிக்கையோடு தகர்த்தெறிய இறைவார்த்தை நமக்கு உதவுகிறது. தினமும் திருப்பலியில் நம்பிக்கைக்குரிய இறைவார்த்தை பகிரப்படும் பொழுது அதை அலட்சியப்படுத்தாமல் வாழ்வாக்கும்போது நாம் புது மனிதராவோம்.



ஏழாம் நாள்

# 7. சமாரியப் பெண்ணின் நம்பிக்கை

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

யோவான் 4:6-15, 39-42

## இறைச்செய்தி

- இயேசு சமாரிய பெண்ணைச் சந்திக்கிறார்.
- தம்மால் சாதாரண யூதராகக் கருதப்பட்ட இயேசுவே, மெசியா என்பதை இறுதியில் உணர்கிறார் சமாரியப் பெண்.
- அப்பெண்ணின் சான்றினைக் கேட்டும், நேரில் கண்டும் சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொள்கின்றனர்.

## மனநிலை

- எனது ஆன்ம தாகத்தைத் தீர்ப்பவர் இயேசு ஒருவரே என்று நம்புவேன்.
- நான் மனம் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்.
- எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவரோடும் நன்கு பழகுவேன்.

**1. தொடக்க இறைவேண்டல்**

**பாடல்** : *கலைமான் நீரோடையை ஆர்வமாய் நாடுதல் போல்*

இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! குற்றங்குறைகளைக் கண்ணோக்காமல் சமாரியப் பெண்ணை உம் இறைபிரசன்னத்தால் ஈர்த்து ஆன்மிக தாகத்தையும் அளவற்ற நம்பிக்கையும் அளித்தீரே. உம்மிலே பற்றுக்கொண்டு நிலைவாழ்வளிக்கும் உம் பேரன்புக்குச் சாட்சிகளாக நாங்கள் வளர்ந்திட வேண்டுமென்று எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

கரூர் மாவட்டத்தில் பிறந்த கிருஷ்ணவேணி தன்னுடைய 12-வது வயதில் தந்தை மற்றும் தாய் ஆகிய இருவரையுமே இழந்துவிட்டார். கிருஷ்ணவேணியின் பெற்றோர் இறந்தபிறகு அவரின் உடன்பிறந்த அண்ணன்மீது கொண்ட நம்பிக்கையில் அவர் உள்விடுதியில் சேர்ந்து படித்தார். அரசுப் பள்ளியில் படித்து வந்த கிருஷ்ணவேணி 10-ம் வகுப்பில் பள்ளியிலேயே இரண்டாம் இடம் பிடித்தார்.

இதையடுத்து, ஆசிரியர் ஒருவரின் உதவியால் தனியார் பள்ளியொன்றில் படித்து 12-ம் வகுப்புப் பொதுத் தேர்வில் 1144 மதிப்பெண்கள் பெற்றார். சில காரணங்களால் மருத்துவம் படிக்க, அரசுக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் போனது. இதனால் மருத்துவர் ஆக வேண்டும் என்கிற கனவு கலைந்து போனதாக நினைத்தவருக்கு, அகரம் அறக்கட்டளை உதவியளித்து படிக்க வைத்தது. அறக்கட்டளை அளித்த நம்பிக்கை மட்டுமல்லாமல், உடன் படித்த நண்பர்கள், யாரென்றே தெரியாதவர்களின் உதவியின் மூலம் கிருஷ்ணவேணி நம்பிக்கையோடு தன்னுடைய மருத்துவக் கனவை நனவாக்கினார்.

சமூகத்தால் தனக்கு எப்படி நம்பிக்கையும் உதவியும் கிடைத்ததோ அதேபோல் உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கும் தன்னால் முடிந்த உதவியை அளித்து வருவதாகவும், கிராமங்களில் விழிப்புணர்வு முகாம் மற்றும் இலவச மருத்துவர் சிகிச்சை போன்றவற்றை செய்துவருவதாகவும் பேட்டியில் மருத்துவர் கிருஷ்ணவேணி தெரிவித்திருக்கிறார்.

**3. அடையாளத்தை அலசுதல்**

* கிருஷ்ணவேணியின் வாழ்க்கை நிலையும் பின்புலமும் என்ன?
* கிருஷ்ணவேணி எவ்வாறு நம்பிக்கையோடு மருத்துவர் கனவை உண்மையாக்கினார்?
* நீங்கள் நம்பிக்கையோடு சாதித்ததாக எதைக் கூறமுடியும்?

**4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்**

- பெற்றோரை இழந்த கிருஷ்ணவேணிக்குப் பலர் நம்பிக்கை தந்தனர்.
- கிடைத்த உதவிகளையும் நம்பிக்கையையும் சரியாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் உயர்ந்தார் கிருஷ்ணவேணி.
- தாம் பெற்ற நலனைப் பிறரும் அடைந்திடப் பகிர்ந்தளித்தார்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

அன்றாட வாழ்வில் ஏற்படும் துன்பங்களைச் சுமந்து உலகப் போக்கில் நம்மையே ஈடுபடுத்திக்கொண்டு நிலைவாழ்வைப் பற்றி அறிந்திடவும், அதன்மீது தாகம் கொள்ளவும் தவறிவிடுகிறோம். அறியாமையில் மூழ்கியிருந்த சமாரியப் பெண்ணின் வாழ்வில் இயேசு எத்தகைய மாற்றத்தையும் நம்பிக்கையையும் கொணர்கிறார் என்பதை திருவிவிலியத்திலிருந்து அறிந்து கொள்வோம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

நடுவில் அரியணையேற்றப்பட்ட திருவிவிலியத்தின் அருகில் சென்று, ஆசிரியர் அதனை வணங்கி, “நிலைவாழ்வைத்



தரும் இறைவார்த்தை இவரே” என்பார். மாணவர்கள் அனைவரும், “நம்பிக்கை கொள்வேன், நிலைவாழ்வைப் பெறுவேன்” என இருமுறை கூறி வணங்குவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

யோவான் 15, 39-42

(முன்னதாகவே தேர்வு செய்யப்பட்ட மாணவர் திருவிவிலியத்தை வணங்கி அதனை எடுத்து உற்சாகமாக முழக்கமிடுவார்).

**8. இறைவார்த்தை விளக்கம்**

★ சிக்கார் என்ற ஊரில் யாக்கோபுவின் கிணற்றருகே இயேசு - சமாரியப் பெண் சந்திப்பு நடைபெறுகிறது.

★ தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண்ணிடம் இயேசு குடிக்கத் தண்ணீர் கேட்கிறார். ஒரு சாதாரண யூதராகத் தோன்றிய இயேசுவிடத்தில் இந்தச் சமாரியப் பெண்ணுக்கு நம்பிக்கை பெருக்கெடுத்தது.

★ இயேசு தண்ணீர் கேட்டதும் “நீர் யூதர், யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை” என்று தண்ணீர் கொடுக்க மறுக்கிறார்.

★ பின் இயேசு, தாம் வாழ்வுதரும் தண்ணீரைக் கொடுக்க வல்லவர் என்றதும், “ஐயா” என்று அழைக்கிறார் அந்தச் சமாரியப் பெண்.

★ அத்தண்ணீர் நிலைவாழ்வை அளிக்கும் என்று சொன்னவுடன், மீண்டும் “ஐயா” என்று அழைக்கிறார்.

★ பின் இயேசு அச்சமாரியப் பெண்ணின் மணவாழ்வைப் பற்றியும் கணவர்களைப் பற்றியும் சொன்னதைக் கேட்ட அவர், ஐயா, நீர் ஓர் “இறைவாக்கினர்” என்று அறிக்கையிடுகிறார்.

★ இறுதியாக, கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என்று சமாரியப் பெண் கூறியதும், “உம்மோடு பேசும் நானே அவர்” என்கிறார் இயேசு. நம்பிக்கை பெருக்கெடுத்து, அவர் மெசியா என்று பிறரிடத்தில் சான்று பகர்கின்றார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- நிலைவாழ்வுதரும் தண்ணீருக்காக என்றும் தாகம் கொண்டு வாழ்வோம்.
- பிறர் நம்பிக்கையில் துவண்டிருக்கும்போது பாகுபாடு ஏதும் பார்க்காமல் நம்மால் முடிந்த விதத்தில் அவர்களுக்கு நம்பிக்கையை அளிப்போம்.
- உண்மையிலும் ஆவியிலும் வழிபடத் துணைநிற்போம்.

எட்டாம் நாள்

# 8. மகதலா மரியா - இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சி

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

யோவான் 20:1, 11-18

## இறைச்செய்தி

- ✶ மகதலா மரியா இயேசுவின் உயிர்ப்புப் பற்றித் தாம் கண்டதையும் கேட்டதையும் அனைவருக்கும் எடுத்துக் கூறி சான்று பகர்ந்தார்.
- ✶ இறைத் திட்டத்தில் மகதலா மரியாவும் ஒரு கருவியாய் பயன்பட்டார்
- ✶ இறுதிவரை ஆண்டவர் இயேசுவைப் பற்றிக்கொள்ள நம்மை நாமே தயாரிக்க வேண்டும்.

## மனநிலை

- ✪ உயிர்த்த இயேசுவின் மேல் நம்பிக்கை வைப்பேன்.
- ✪ வாழ்வில் நான் கண்ட இயேசுவின் அதிசயங்களை மற்றவர்களிடம் எடுத்துக்கூறி அவர்களும் நம்பிக்கையில் வாழ அவர்களை வழி நடத்துவேன்.

### 1. தொடக்க இறைவேண்டல்

**பாடல்** : *தேர்ந்து கொள்க.*

உயிர்ப்பின் ஊற்றாகிய உன்னத இறைவா! மகதலா மரியாவிற்குத் தோன்றி அவர் வாழ்க்கையில் பல மாற்றங்களைப் புரிந்தீர் நாங்களும் எங்கள் வாழ்க்கையில் உம்மைச் சந்தித்து மற்றவர்களுக்கும் எடுத்துரைக்க வரம் தர வேண்டும் என்று உம்மை இறைஞ்சுகின்றோம். எங்கள் ஆண்டவர் கிறிஸ்து வழியாக - ஆமென்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க முன்னாள் குடியரசுத் தலைவர். கறுப்பர் இன விடுதலைக்காகப் பாடுபட்டவர். அவர் பதவியில் இருந்தபோது அடிமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவந்தார். அதனால் ஆங்காங்கே உள்நாட்டுக் கலவரங்கள் வெடித்தன. தைரியமாக அவற்றை அடக்கிக்கொண்டிருந்தார் லிங்கன். அந்தச்



சூழலில், ஆபிரகாம் லிங்கனுக்கு ஆதரவாகத் தன் இரண்டு மகன்களையுமே ராணுவத்திற்கு அனுப்பி வைத்திருந்தார் ஒரு வீரத்தாய். சில நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டனர். அவர்களிடம் அவர் சொன்னார்: “இப்படி ஒரு கலகம் நடக்கும் என 25 ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்திருந்தால்.... நான் இன்னும் இரண்டு ஆண் மக்களைப் பெற்றிருப்பேன்.....” தாய்மை சக்தி-அடிமைத் தள ஆட்டத்திற்கு அத்தியாவசிய சக்தி.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ✦ இறை நம்பிக்கை இல்லாமல் என்றாவது வாழ்ந்தது உண்டா?
- ✦ கடவுள் வார்த்தையை எடுத்துரைக்கத் தவறியது உண்டா?
- ✦ நற்காரியங்களுக்காக எந்தத் தைரியமான முடிவை எடுத்திருக்கிறீர்கள்?

### 4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்

- துணிவுடன் இருத்தல் நல்லது.
- கடவுளின்மேல், தன்மேல் நம்பிக்கை மிகவும் முக்கியம்.
- நாம் கண்ட இறைவனை மற்றவர்களுக்கும் கொண்டு போய்ச் சேர்ப்பது தெய்வீக செயல்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

ஒரு பெண்ணாக இருந்து கொண்டு, இறைவன்மேல் பற்றுக் கொண்டு தைரியமாக இயேசுவின் கல்லறைக்குச் சென்று, இறைமகனைத் தேடி அவரைக் கண்டுணர்ந்து பிறருக்கும் எடுத்துக் கூறிய மகதலா மரியாவைப் பற்றிய இறைவார்த்தைக்குச் செவிசாய்ப்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

"வார்த்தையே இறைவன் - இறைவனே வார்த்தை" என்ற முழக்கத்தோடு பவனியாக இறைவார்த்தையை எடுத்துக்கொண்டு வருவர். குறிப்பிட்ட இடத்திற்கு வந்தவுடன் ஒருவர் திரு விவிலியத்தை உயர்த்தி, “நாம் இறைவார்த்தையின் ஒளியில் ஒருவர் மற்றவரைக் காண்போம்” என்று கூறுவார், அப்பொழுது அனைவரும் தலை தாழ்த்தி வணங்குவர்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

யோவான்; 20:1, 11-18

(முன்னதாகவே தேர்வு செய்யப்பட்ட மாணவர் திரு விவிலியத்தை வணங்கி அதனை எடுத்து உற்சாகமாக முழக்கமிடுவார்).

## 8. இறைவார்த்தை விளக்கம்

- யோவான் 20:1ன்படி இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார். இது, மகதலா மரியாவின் ஆர்வம் ஏக்கம் மற்றும் ஆண்டவர்மேல் இருந்த பேரன்பைக் குறிப்பிடுகின்றது
- அனைவரும் தாங்கள் தங்கி இருந்த இடத்திற்குத் திரும்ப சென்றார்கள். ஆனால் மகதலா மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருக்கிறார். ஏதோ ஒரு மூலையில் சிறிதளவு நம்பிக்கை ஒட்டிக்கொண்டுள்ளது. எப்படியாவது ஆண்டவரை நான் பார்த்துவிட மாட்டேனா என்ற ஒரு நம்பிக்கையின் வெளிப்பாடுதான் மரியாவின் அழுகை.
- மகதலா மரியா வீரம் நிறைந்தவராய் இருந்த ஒரே காரணத்தினாலேயே, யாரும் செய்ய இயலாத ஒரு செயலைத் தைரியமாய் செய்கிறார்.
- மகதலா மரியாவின் அன்பில் கள்ளம் கபடம் இல்லை. ஒரு தூய குழந்தை மொழியின் அன்பு. ஏனென்றால் யாரோ என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டனர் என்று மழலைத்தனமாகக் கூறுகிறார். அந்த அன்பில் தூய்மை உள்ளது.
- ஆண்டவர் தம் உயிர்ப்பின் வெளிப்பாட்டை முதலாவதாக ஒரு பெண்ணுக்கு வெளிப்படுத்துகின்றார். அதுவும் சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கின்ற மகதலா மரியாவிற்கு வெளிப்படுத்துகின்றார்.
- பெண்களை ஒரு பொருட்டாக மதிக்காத பலர் நம்மிலும் உண்டு. ஆனால் பெண்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.
- மகதலா மரியா ஏன் ஒரு விளிம்பு நிலைப் பெண்?
- மகதலா என்றால் கருவாடு என்று அர்த்தம். எனவே பெயரிலேயே மரியா கடலோரப் பெண்மணி என கருதப்படுகின்றார். இதிலிருந்து மரியா பின்தங்கிய நிலையைக் கொண்டவர் என தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.
- ஆனால் ஆண்டவர் அவரைத்தான் தேர்ந்தெடுக்கிறார். தம்முடைய உயிர்ப்பை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், தமது உயிர்ப்பைப் பற்றிய செய்தியைப் பரப்ப முழு உரிமையையும் கொடுத்து அனுப்புகிறார்.



- பலவீனமானவர்களைப் பலப்படுத்துவதில் இறைவன் மிகப் பெரியவர். நாம் எப்பொழுதும் யாரையும் பலவீனமானவர்கள் எனக் கூறக்கூடாது. குறிப்பாக பெண்கள் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள். ஏனென்றால் ஆண்டவருடைய பார்வை வித்தியாசமானது

## 9. உய்த்துணரச் செய்தல்

எல்லா நேரமும் ஆண்டவர்மேல் பற்றுக் கொண்டு என்ன நடந்தாலும் நம்பிக்கையோடு மற்றும் நல்ல காரியங்களைத் தைரியத்தோடு செய்வோம். இயேசு பற்றி நாம் கண்டவை மற்றும் கேட்டவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்வோம்.

ஒன்பதாம் நாள்

# 9. தொடக்கக் காலத் திரு அவையின் பெண்கள்

*(குறிப்பு : இப்பாடத்தைக் குறைந்தது இருமுறையாகிலும் வாசித்துப் பாடத்தைத் தயாரித்திடுக).*

## இறைவார்த்தை

திருத்தூதர் பணிகள் 16:11-15; உரோமையர் 16:1-15

## இறைச்செய்தி

- ✦ திருத்தூதர்களின் வழியாகப் பெண்கள் இறை நம்பிக்கையைப் பெற்றார்கள்.
- ✦ இறைவார்த்தைக்குச் செவிமடுத்து தானும் மனமாற்றம் பெற்று தன் குடும்பத்தாரும் மனம்மாற்றம் பெறச் செய்தார் லீதியா.
- ✦ தொடக்கக் காலத் திரு அவையில் திருத்தூதுப் பணியின் மூலம் பெயர்பெற்றார்கள் பெண்கள்.

## மனநிலை

- ✶ தொடக்கக் காலத் திரு அவையில் பவுலின் உடன் உழைப்பாளர்களாகப் பெண்கள் திகழ்ந்தார்கள் என்பதை அறிந்து மகிழ்வேன்.
- ✶ பெண்கள் ஆண்களுக்கு இணையாக நற்செய்திப் பணிசெய்தார்கள்.
- ✶ பவுல் தமது திருமுகத்தில் நிறையப் பெண்களுக்கு, அவர்கள் செய்த செயல்களுக்காக வாழ்த்தும் நன்றியும் செலுத்துகிறார்.

### 1. தொடக்க இறைவேண்டல்

**பாடல்** : *தேர்ந்து கொள்க.*

தாயும் தந்தையுமான இறைவா! இந்நாளில் எங்கள் அனைவருக்கும் நிறைவாக ஆசியளித்தருளும். நாங்கள் பெண்களை நல்ல மதிப்போடும், மரியாதையோடும், வழிநடத்த வேண்டுமென்றும் அவர்களும் ஆண்களுக்கு இணையான சக்தி உள்ளவர்கள் என்றும் ஏற்று வாழ உம்மை மன்றாடுகின்றோம்.



### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

600 பிள்ளைகளின் வாழ்வுக்காக 10 கின்னஸ் பதிவுகளை முறியடித்த வீராங்கனையின் கதை. மரியா கான்செய்சா என்ற பெண்மணி பங்களாதேஷ் சென்றபோது ஏழைக் குழந்தைகளுக்கு உதவுவதாக வாக்களித்தார். அதனடிப்படையில் கின்னஸ் சாதனை பல புரிந்து வெற்றிபெற்றார். தான்சானியாவில் இருக்கும் கிளிமஞ்சாரோ மலைமீது ஏறி சாதனை படைத்தார். 'North Pole' எனப்படும் வட துருவத்தில், கடுமையான பனிப்பொழிவுக்கு மத்தியில் பயணம் மேற்கொண்டார். எவரெஸ்ட்டில் ஏறிய முதல் போர்ச்சுகீசியப் பெண் என்ற சாதனையைப் புரிந்தார். ஆறே வாரங்களில் ஏழு கண்டங்களில், ஏழு மாரத்தான் போட்டிகளில் கலந்துகொண்டு 10 நாள்களில் இலக்கை அடைந்தார். இதுவரை 10 கின்னஸ் சாதனைகளை முறியடித்திருக்கிறார்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ✡ மரியா கான்செய்சா போன்று உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது சமூகப் பணி செய்கிறார்களா?
- ✡ சமூகப் பணி இன்று எவ்வாறு இருக்கிறது?
- ✡ உங்கள் பங்கில் நீங்கள் எப்படிப் பணி செய்கிறீர்கள்?

### 4. வாழ்க்கை மதிப்பீடுகளைக் காணச் செய்தல்

நம் வாழ்வு கடவுள் நமக்குக் கொடுத்த கொடை. அதைக் கொண்டு பிறர் வாழ்வு உயர நாம் நமது பங்களிப்பை முழுமையாக அளிப்போம்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

திருத்தூதர் பவுலின் பணிகளில் பல பெண்கள் தங்களின் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். அவர்களின் பங்களிப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்ட பவுலடியார் அவர்களுக்குக் கூறும் வார்த்தைகளைக் கேட்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

மாணவர் அனைவரும் திருவிவிலியத்தைச் சுற்றி வட்டமாக நின்று "வாழ்வு தருவது இறைவார்த்தை" என்ற பாடலைப் பாடி கைகளைக் குவித்து வணக்கம் செலுத்துவர்.

### 7. இறைவார்த்தை முழக்கம்

திருத்தூதர் பணிகள் 16:11-15; உரோமையர் 16:1-15

(முன்னதாகவே தேர்வு செய்யப்பட்ட மாணவர் திரு விவிலியத்தை வணங்கி அதனை எடுத்து உற்சாகமாக முழக்கமிடுவார்)

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ★ லீதியா செந்நிற ஆடைகளை விற்பவர்.
- ★ பவுலின் வார்த்தைகளைக் கேட்டு மனம்மாறி திருமுழுக்குப் பெற்றார்.
- ★ தனது வீட்டாரையும் திருமுழுக்குப் பெறச் செய்தார்
- ★ உரோமையர் 16 அதிகாரத்தில் 9 பெண்களின் பெயர்களைக் குறிப்பிட்டு வாழ்த்துக் கூறுகின்றார் பவுலடியார். இவர்கள் தொடக்கக் காலத் திரு அவையில் ஆண்களுக்கு இணையாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:
- ★ பெயிபா: திருத்தொண்டராக கெங்கிரேயாவில் பணியாற்றியவர். பவுல் எழுதிய கடிதங்களை எல்லாம் உரோமைக்கு எடுத்துச் சென்றவர். மிகப் பொறுப்பாக பணியாற்றி நற்செய்தியைப் பறைசாற்றியவர் (உரோ 16:1).
- ★ பிரிஸ்கா : இந்தப் பெயர் பிரிஸ்சில்லா என்பதன் சுருக்கம் (1கொரி 16:19, திப 18,) தனது கணவர் அக்கிலாவோடு சேர்த்தே சொல்லப்படுகிறவர். தங்கள் வீட்டில் திரு அவை கூட இடமளித்தவர் (உரோ 16: 3).
- ★ மரியா: கடின உழைப்பாளி (உரோ 16:6).
- ★ யூனியா : பவுலின் உறவினர் திருத்தூதர்களில் பெயர் பெற்றவர் (உரோ 16:7).
- ★ திரிபேனா, திரிபோசா : மறைபரப்புப் பணியில் கடினமாக உழைத்தவர்கள் (உரோ 16: 12).
- ★ ரூபுவின் அன்னை: இவர் பணிவாழ்வில் தாயன்புக் காட்டியவர். இவரைப் பவுல் தனது அன்னையாகவும் குறிப்பிடுகின்றார் (உரோ 16:13).
- ★ யூலியா, நேரேயுவின் சகோதரி : தொடக்கக் காலத்தில் பணிபுரிந்த பெண்களுக்கு வாழ்த்துச்சொல்கின்றார் (உரோ 16:15).
- ★ உரோமையர் 16ஆம் அதிகாரத்தில் 26 பேரைப் பவுல் வாழ்த்துகிறார். இவர்கள் பவுல் சென்றிராத உரோமைச் சபையின் உறுப்பினர்களாக இருக்க முடியாது. எபேசில் பணிபுரிந்தவர்களாக இருக்க வேண்டும். இவ்வதிகாரம் இத்திருமுகத்தை எடுத்துச்சென்ற பெய்பா செல்லும் வழியில், எபேசிலிருந்த பணியாளர்களிடம் கொடுக்க வேண்டிய வாழ்த்து மடலாக இருக்கலாம். அது, காலப்போக்கில் உரோமையர் திருமுகத்துடனே இணைக்கப்பெற்றிருக்க வேண்டும்.



**9. உய்த்துணரச் செய்தல்**

நம்மிடம் இருப்பதைக் கொண்டு பிறர் வாழ்வை வளப் படுத்துவோம். பெண்களின் ஆற்றலை மதிப்போம். பெண்கள் நாட்டின் கண்கள் என்பதை உணர்வோம்.

## VBS ஆசிரியர்கள் கவனத்திற்கு

✹ குழந்தைகளின் வயது, மனநிலைக்கு ஏற்ப

1. முதல் குழு - விருப்ப நிலை (UKG, I, II வகுப்புகள்)
2. இரண்டாம் குழு - தொடக்க நிலை (III, IV, V வகுப்புகள்)
3. மூன்றாம் குழு - இளநிலை (VI, VII, VIII வகுப்புகள்)
4. நான்காம் குழு - முதுநிலை (IX, X, XI வகுப்புகள்)

என்று தனித்தனியாக ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் உண்டு. மேலும், வருகைப் பதிவு படம், பாடல் ஏடு, பேட்ஜ், தொடர் கதை நூல், ஒலிக்குறுந்தகடு (CD), திரைப்பட DVD, நாடக நூல் ஆகிய துணைக்கருவிகளும் உண்டு.

✹ பரிந்துரைக்கப்படும் மாதிரிக் கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 09-00 | - | ஆசிரியர்கள் கூடிச் செபித்தல் |
| 09-15 | - | பொதுவான பாடல்பயிற்சி |
| 09-45 | - | மாணவர்கள் கூடிச் செபித்தல் |
| 10-00 | - | குழுப் பாடவேளை - I - *(அந்த நாளுக்குரிய இறைவார்த்தைப் பாடத்தைத் தகுந்த தயாரிப்புடன் துணைக்கருவிகளுடன் குழுக்களில் ஆசிரியர் நடத்துகிறார்)* |
| 10-45 | - | இடைவேளை - சிற்றுண்டி வழங்குதல் |
| 11-00 | - | குழுப் பாடவேளை - II - *(குழுக்களில் விடை எழுதுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், வருகைப் பதிவு படம் ஒட்டுதல், வர்ணம் தீட்டுதல்)* |
| 11-45 | - | பொதுவான விளையாட்டு |
| 12-00 | - | பொதுவான பாடல் பயிற்சி |
| 12-15 | - | பொதுவான தொடர்கதை |
| 12-30 | - | நிறைவு செபம், திறனாய்வு, திட்டமிடல். |

✹ **ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் திருவிவிலியம் கொணர்தல் வேண்டும்.**

© *தயாரிப்பு:* **அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ், செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு.**
*வெளியீடு:* **இயக்குநர், தமிழக முப்பணி நடுநிலையம், திண்டிவனம் - 604 001**

விடுமுறை

**இரண்டாம் ஆண்டு – B**

**விவிலியப் பள்ளி**

# VBS

# ஆசிரியர் கையேடு

**நான்காம் குழு – முது நிலை (IX, X, XI வகுப்புகள்)**

# மாற்றம் கொணர்ந்த விவிலியப் பெண்கள்

